என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வருட நிதிநிலை அறிக்கையில், மயிலாப்பூரில் 5 புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி கட்டப்படும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டது. மயிலாப்பூரில் கட்டடம் கட்டப்படும் என்று எதிர்பார்த்தோம். மயிலாப்பூரில் மாணவர்கள் விடுதி மிகவும் அவசியம். ஏனென்றால், அங்கு அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருக்கின்றன, மாணவர்கள் அங்கு தங்கி கல்வி பயில விரும்புவார்கள் என்பதால், அந்த விடுதிக் கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக வலியுறுத்தி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) வாய்ப்பு அளிக்கிறேன்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துதல் குறித்த தகவல் தொழில்நுட்பத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். இன்று,

2020 செப்டம்பர் 15] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றைக் கற்றுத் தந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்தநாள். அதனைப் போற்றிப் புகழ்வோம். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருநாமத்தின் பெயரிலேயே கட்சியைத் தோற்றுவித்து, 11 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சியை நம் நாட்டு மக்களுக்கு வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சியை நாட்டு மக்களுக்குத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருநாமத்தின் பெயரில் இருக்கின்ற இந்த இயக்கம்மூலம் இருபெரும் தலைவர்களின் மறைவிற்குப் பிறகு, 3½ ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சியை தமிழகத்திற்குத் தந்துகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனவே, இவ்வாறு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாளைப் போற்றிப் புகழ்வோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது வெவ்வேறு அரசுத் துறைகள் தங்களுக்கென தனித்தனியே துறைவாரியான மக்கள் குறைதீர்ப்பு மையங்கள் மற்றும் இணையதளங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகின்றன. மாவட்ட அளவில் திங்கட்கிழமைதோறும் பொது மக்கள் குறைதீர்க்கும் நாள், மாதாந்திர மனுநீதி நாள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் குறைதீர்க்கும் நாள், அம்மா திட்ட குறைதீர்க்கும் நாள், ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள் போன்றவற்றிலும், மாநில அளவில் முதலமைச்சரின் தனிப் பிரிவு, அம்மா அழைப்பு மையம் போன்ற அமைப்புகளிலும் மனுக்கள் பெறப்பட்டு, தீர்வுகள் காணப்படுகின்றன. இதனால், ஒரே நபர் பல்வேறு இடங்களில் மனுக்களை அளிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரே கோரிக்கை மனு, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் வழங்கப்படுவதையும் காண முடிகிறது. எனவே, தமிழ்நாடு அரசுத் துறைகளின்கீழ் செயல்படும் எல்லா குறைதீர்ப்பு அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, குறைகள் விரைந்து களையப்படுவதைக் கண்காணிக்க ஒரு சிறப்பான அமைப்புமுறை தேவைப்படுகிறது. எனவே, பொது மக்களின் குறைகளை உடனுக்குடன் பதிவு செய்து, அவற்றிற்குத் தீர்வு காண, ஒரு குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் அமைப்பதன் அவசியத்தை உணர்ந்து “முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்” ஒன்றை அரசு செயல்படுத்த உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] *[2020 செப்டம்பர் 15*

இத்திட்டம் முதற்கட்டமாக தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் 12.78 கோடி ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படும். முதற்கட்டமாக 100 இருக்கைகள் கொண்ட உதவி மையமாக செயல்பட இருக்கும் இம்மையம், தேவைக்கேற்ப விரிவாக்கம் செய்யப்படும். குறைதீர்க்கும் முகாம்களிலோ, இணையதளத்திலோ அல்லது அரசு அலுவலர்களோ குறைதீர்க்கும் மனுக்களைப் பெறும்போது வேலைவாய்ப்பு கோரி பெறப்படும் மனுக்களே அதிகமாக உள்ளன. இதனைக் கருத்தில்கொண்டு, இந்த மையங்களில் பெறப்படும் அம்மனுக்கள் சம்பந்தப்பட்ட துறைகள்மூலம் உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு, தேவைப்படின் மனுதாரர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, உரிய வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டத்தின்மூலம் பல்வேறு அரசுத் துறைகள் தொடர்பான தனது குறைகளை, மனுதாரர் ஒரே தளத்தில் பதிவேற்றம் செய்யலாம். இந்த மனுக்கள் "முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்"மூலம் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, விரைந்து தீர்வு காணப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

3. தகவல் கோரல்

(அ) நீட் தேர்வை இரத்து செய்யாத மத்திய அரசை எதிர்த்தும், நீட் தேர்வை இரத்து செய்ய மாநில அரசு கேட்கவில்லையென்று கூறிய மத்திய அமைச்சரைக் கண்டித்தும் கண்டனத் தீர்மானம் கொண்டுவர வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் அனிதா முதல் இன்று திருச்செங்கோடு மோதிலால் வரை பல மாணவ, மாணவிகள் நீட் தேர்விற்குப் பயந்து தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கிறார்கள். நீட் தேர்வை இரத்து செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட நாம் அனைவருமே தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். இதே பேரவையில் நீட் தேர்விற்கு எதிராக மாணவச்